பக்கங்கள் 16+3

மாலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2058 | தை 30 வெள்ளிக்கிழமை 13.02.2026 | அதிர்வு 196

## சிரேஷ்ட இடதுசாரி தலைவர் திஸ்ஸ விதாரண இன்று காலமானார்



இலங்கையின் சிரேஷ்ட இடதுசாரி அரசியல் தலைவர்களுள் ஒருவரான லங்கா சமசமாசக் கட்சியின் 05▶

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்

# அறகலயவின் மூலம் ஆட்சிக்கு வந்தவர்கள் கறுப்புக்கொடி ஏற்றுவதைத் தவறு என்பதா?

## சங்குக் கூட்டணி காட்டத்துடன் கேள்வி



(எஸ்.நிதர்ஷன்)

பல்கலைக்கழக மாணவர்களின் கறுப்புக்கொடி போராட்டத்தை சட்டவிரோதமானது என அறிவித்துள்ள பல்கலைக்கழ மானியங்கள் ஆணைக்குழுவின் கருத்து பிழையானது என்று தெரிவித்துள்ள ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி, போராட்டத்துக்கான காரணத்தைக் கண்டறிந்து அதனைத் தீர்ப்பதற்கு முயற்சிக்க வேண்டும் என்றும் சுட்டிக் காட்டியுள்ளது.

இது குறித்து ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி (சங்கு சின்னக் கட்சி) சார்பில் அதன் பேச்சாளர் சுரேஷ் க.பிரேமச்சந்திரன் இன்று விடுத்துள்ள ஊடக அறிக்கையின் முழு விவரம் வருமாறு:-

“இலங்கை சுதந்திரம் அடைந்ததிலிருந்து மிக நீண்டகாலமாக சுதந்திர தினத்தையும் 05▶

# தமிழரசுத் தீர்மானங்களை விமர்சித்தால் நடவடிக்கை



## கட்சி உறுப்பினர்களுக்கு செயலாளர் அறிவுறுத்தல்

“இலங்கைத் தமிழரசுக் கட்சியின் முடிவுகள், தீர்மானங்களைப் பகிரங்க வெளியில் விமர்சிக்கின்ற கட்சியின் உறுப்பினர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. 05▶

### கிளிநொச்சியில் நள்ளிரவு பரபரப்பு

# மணல் கடத்தல் வாகனம் மீது பொலிஸார் துப்பாக்கிச்சூடு!

## சாரதி தப்பியோட்டம்





(மரியசீலன் திலைக்ஸ்)

கிளிநொச்சி, தர்மபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தேராவில் பகுதியில் நேற்று நள்ளிரவு சட்டவிரோத மணல் கடத்தலில் ஈடுபட்ட வாகனம் ஒன்றின் மீது பொலிஸார் 05▶



# யாழ். மாநகர சபையில் ரகளை

### பிரேரணையைக் கிழித்தெறிந்து ஈ.பி.டி.பியினர் வெளிநடப்பு

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் மாநகர சபையின் இன்றைய அமர்வில், அப்பிள் கடை வியாபாரிகளின் வாழ்வாதாரப் பிரச்சினை தொடர்பாக ஏற்பட்ட கடும் வாக்குவாதத்தைத் 05▶




# யாழ். மாநகர சபை முன்பாக அப்பிள் வியாபாரிகள் போராட்டம்

## தர்சானந்தின் பிரேரணைக்கு எதிர்ப்பு

**(எஸ்.நிதர்ஷன்)**

யாழ்ப்பாணம் மாநகர சபை உறுப்பினர் ப.தர்சானந்தினால் முன்வைக்கப்பட்ட பிரேரணைக்கு எதிர்ப்புத் தெரிவித்து, யாழ். நகர அப்பிள் கடை வியாபாரிகள் இன்று மாநகர சபை நுழைவாயிலுக்கு முன்பாகக் கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்றினை முன்னெடுத்தனர்.

யாழ். நகரில் அமைந்துள்ள அப்பிள் கடைகளின் செயற்பாடுகள் தொடர்பாக உறுப்பினர் ப.தர்சானந்த் சபையில் முன்வைத்த பிரேரணையினால் தமது வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதாகத் தெரிவித்தே இந்த ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளப்பட்டது.

போராட்டத்தில் ஈடுபட்ட வியாபாரிகள், தமது கோரிக்கைகள் மற்றும் நியாயங்கள் அடங்கிய மகஜரை மாநகர சபை உறுப்பினர்களிடம் கையளித்தனர்.

நகரப் பகுதியில் வர்த்தக நடவடிக்கைகளை முன்னெடுப்பதில் தமக்கு ஏற்படும் சவால்கள் மற்றும் குறித்த பிரேரணையால் ஏற்படக்கூடிய பாதிப்புகள் குறித்து இதன்போது அவர்கள் அதிகாரிகளின் கவனத்துக்குக் கொண்டு வந்தனர்.










# ஜனநாயகத்தைச் சவப்பெட்டிக்குள் தள்ளும் வகையில் புதிய சட்டமூலம்

## உயர்நீதிமன்றம் செல்வேன் என்று பீரிஸ் எச்சரிக்கை



"பயங்கரவாதத்திலிருந்து அரசைப் பாதுகாக்கும்" என்ற பெயரில் அரசு தயாரித்துள்ள புதிய சட்ட வரைவு, நாட்டின் ஜனநாயகத்தையும் அடிப்படை உரிமைகளையும் முற்றாக அழித்துவிடும் என்று முன்னாள் வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்தார்.

கொழும்பு, பொரளையிலுள்ள என்.எம். பெரேரா மத்திய நிலையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"தற்போதுள்ள பயங்கரவாதத் தடைச் சட்டத்தை விடவும் பாரதூரமான அம்சங்கள் இதில் உள்வாங்கப்பட்டுள்ளன. குறிப்பாக, 'பயங்கரவாதம்' என்பதற்கு மிக விரிவான வரைவிலக்கணம் வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம், 13 வகையான சாதாரண குற்றச் செயல்களைக்கூட பயங்கரவாதமாகச் சித்தரித்துத் தண்டனை வழங்க அரசு முற்படுகின்றது. இது தனி மனித சுதந்திரத்துக்குப் பாரிய அச்சுறுத்தலாகும்.

இந்தச் சட்ட வரைவு நிறைவேற்றப்பட்டால், ஜனாதிபதிக்கு வரைமுறையற்ற அதிகாரங்கள் கிடைக்கும்.

எந்தவொரு அமைப்பையும் ஜனாதிபதி தனது விருப்பப்படி "சட்டவிரோதமானது" என அறிவிக்க முடியும்.

எந்தவொரு பொது இடத்தையும் "தடை செய்யப்பட்ட பகுதி"யாகப் பிரகடனப்படுத்தும் அதிகாரம் அவருக்கு வழங்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதியால் தடை செய்யப்பட்ட ஒரு பகுதியை அல்லது அங்கு நடக்கும் விடயங்களைப் பற்றி ஊடகவியலாளர்கள் செய்தி அறிக்கையிட்டால், அவர்களுக்கு 3 வருட கடூழிய சிறைத்தண்டனை அல்லது 30 இலட்சம் ரூபா அபராதம் விதிக்கப்படும். இது ஊடகவியலாளர்களை அச்சுறுத்தி, உண்மைகளை மறைக்கும் செயலாகும்.

நீதிமன்றக் காவலில் உள்ள ஒருவரை, நீதிமன்றத்தின் அனுமதியின்றிப் பொலிஸ் தடுப்புக் காவலுக்கு மாற்றும் அதிகாரம் பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்பட்டுள்ளது. இது சட்டத்தின் ஆட்சியைச் சீர்குலைப்பதுடன், நீதித்துறையின் சுயாதீனத்தைப் பறிக்கும் செயலாகும்.

அரசமைப்பு வழங்கியுள்ள அடிப்படை உரிமைகளைச் சவப்பெட்டிக்குள் தள்ளும் இந்த மனிதாபிமானமற்ற சட்டமூலம் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டவுடன், அதனை எதிர்த்து நான் உயர்நீதி

# முன்னாள் எம்.பி. அமரகீர்த்தி கொலைத் தீர்ப்பு: நீதித்துறை மீதான நம்பிக்கை மீண்டும் உறுதி!

## முன்னாள் அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன தெரிவிப்பு

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அமரகீர்த்தி அத்துகோரலவின் படுகொலை தொடர்பில் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பானது, நீதித்துறை மீது மக்கள் வைத்துள்ள நம்பிக்கையை மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளது என்று முன்னாள் அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன தெரிவித்தார்.

பத்தரமுல்லையில் அமைந்துள்ள ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் கட்சித் தலைமையகத்தில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிட்ட முக்கிய அம்சங்கள் வருமாறு:-

### மிலேச்சத்தனமான வன்முறைக்கு ஒரு பாடம்

"எமது கட்சியின் அமைதியான உறுப்பினராக இருந்த அமரகீர்த்தி அத்துகோரலவின் கொலை தொடர்பான தீர்ப்புக்காக நீதித்துறைக்கு எனது கௌரவத்தைத் தெரிவித்துக் கொள்கின்றேன். இந்தத் தீர்ப்பின் ஊடாக நாட்டில் சட்டம் இன்னும் உயிருடன் இருக்கிறது என்ற வலுவான செய்தி சொல்லப்பட்டுள்ளது. வன்முறை




யைத் தூண்டுபவர்களுக்கும், மிலேச்சத்தனமாகச் செயற்படுபவர்களுக்கும் இதுவொரு சிறந்த பாடமாகும்.

### அரசு மீதான விமர்சனங்கள்

இன்று நாடாளுமன்றமும், சபாநாயகரின் செயற்பாடுகளும் கேலிக்கூத்தாக மாறியுள்ளன. கடந்த ஒன்றரை வருட காலத்தில் மக்கள் எதிர்பார்த்த எந்தவொரு ஆக்கபூர்வமான மாற்றமும் நாட்டில் நிகழவில்லை.

'சட்டத்தின் முன் அனைவரும் சமம்' என ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க கூறினாலும், நடைமுறையில் எதிர்க்கட்சியினர் மீது மட்டுமே சட்டம் பாய்கின்றது. அரச தரப்பினரின் ஊழல் மற்றும் மோசடிகள் குறித்து எவ்வித விசாரணைகளும் முன்னெடுக்கப்படுவதில்லை.

முன்னாள் தலைவர்கள் பாதுகாப்பு மற்றும் நேர மேலாண்மைக்காக ஹெலிகொப்டர்களைப் பயன்படுத்தியபோது அதைக் கடுமையாக விமர்சித்தவர்கள், இன்று அதே வசதிகளைத் தாராளமாகப் பயன்படுத்தி வருகின்றனர்.

### உயிரற்ற சுதந்திர தினமும் ரணவிருவர்களும்

கடந்த சுதந்திர தின நிகழ்வுகள் எவ்வித உத்வேகமும் இன்றி 'உயிரற்ற' ஒன்றாகவே அமைந்திருந்தது. நாட்டின் கௌரவத்தைப் பறைசாற்றும் ரணவிருவர்களின் பெருமை சிதைக்கப்பட்டுள்ளது."
- என்றார்.

# அரசியல் தோல்வியால் எதிர்க்கட்சியினர் கதறல்

## லக்ஷ்மன் யாப்பாவின் குற்றச்சாட்டுக்கு அரசு பதிலடி

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் முன்னாள் அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன, எமது அரசு மீது முன்வைத்த விமர்சனங்கள் யாவும், அரசியல் ரீதியாகப் பலமிழந்துள்ள ஒரு தரப்பின் விரக்தியான வெளிப்பாடுகளே என்று அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அமரகீர்த்தி அத்துகோரலவின் படுகொலை தொடர்பில் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பானது, நீதித்துறை மீது மக்கள் வைத்துள்ள நம்பிக்கையை மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளது என்று தெரிவித்துள்ள முன்னாள் அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன, 'சட்டத்தின் முன் அனைவரும் சமம்' என ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க கூறினாலும், நடைமுறையில் எதிர்க்கட்சியினர் மீது மட்டுமே சட்டம் பாய்கின்றது. அரச தரப்பினரின் ஊழல் மற்றும் மோசடிகள் குறித்து எவ்வித விசாரணைகளும் முன்னெடுக்கப் படுவதில்லை என்றும் கூறியுள்ளார்.

இதற்குப் பதிலளிக்கும்போதே அமைச்சர் பிமல் ரத்நாயக்க மேற்கண்டவாறு



கூறினார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவிக்கையில்,

"நீதிமன்றத் தீர்ப்புகளை நாம் கௌரவிக்கின்றோம். அமரகீர்த்தி அத்துகோரலவின் வழக்கில் நீதி நிலைநாட்டப்பட்டிருப்பதை வரவேற்கும் அதேவேளை, 'எதிர்க்கட்சியினர் மீது மட்டுமே சட்டம் பாய்கின்றது' என்ற குற்றச்சாட்டை முற்றாக மறுக்கின்றோம்.

கடந்த காலங்களில் மூடிமறைக்கப்பட்ட ஊழல் கோப்புகள் ஒவ்வொன்றாகத் திறக்கப்படுவதால் ஏற்பட்ட அச்சமே இத்தகைய கருத்துக்களுக்குக் காரணம். சட்டம் அதன் கடமையைச் செய்கின்றது, அதில் அரசியல் தலையீடுகள் எதுவும் இல்லை.

முன்னாள் ஆட்சியாளர்கள் தேவையற்ற ஆடம்பரங்களுக்காகவும், தனிப்பட்ட பயணங்களுக்காகவும் மக்கள் பணத்தைச் செலவிட்டு ஹெலிகொப்டர்களைப் பயன்படுத்தினர். ஆனால், தற்போதைய அரசு மிகவும் இக்கட்டான பாதுகாப்புச் சூழல்களிலும், நாட்டின் மிக முக்கியமான பணிகளுக்காகவும் மட்டுமே அத்தியாவசியத் தேவையின் அடிப்படையில் அரச வசதிகளைப் பயன்படுத்துகின்றது. இதில் எவ்விதமான வீண்விரயமும் இல்லை.

சுதந்திர தினத்தை ஆடம்பரமாகக் கொண்டாடி மக்கள் பணத்தை வீணடிப்பதை விட, அதன் அர்த்தத்தை உணர்ந்து எளிமையாக நடத்துவதையே இந்த அரசு விரும்பியது. ரணவிருவர்களின் கௌரவத்தைச் சிதைப்பதாகக் கூறுவது வேடிக்கையானது. நாட்டின் உண்மையான மாவீரர்களுக்கான மரியாதையை இந்த அரசு எப்போதும் வழங்கும். அவர்களை அரசியல் பகடைக்காய்களாகப் பயன்படுத்தும் காலம் மலையேறிவிட்டது." – என்றார்.

# மக்களைத் திசைதிருப்ப வேண்டாம்!

## சர்வதேச தரத்துடனேயே புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம்

## எதிர்க்கட்சியினரின் விமர்சனங்களை அடியோடு நிராகரித்தது அரசு

புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்ட வரைவு குறித்து எதிர்க்கட்சியினர் முன்வைத்துள்ள விமர்சனங்கள் மக்களைத் திசைதிருப்பும் முயற்சியாகும் என அரச தரப்பு பதிலடி கொடுத்துள்ளது. நாட்டின் பாதுகாப்பை உறுதிப்படுத்தவும், நவீன கால அச்சுறுத்தல்களை எதிர்கொள்ளவுமே இந்தப் புதிய சட்டமூலம் கொண்டு வரப்படுகின்றது எனவும் அரசு சுட்டிக்காட்டியுள்ளது.

"பயங்கரவாதத்திலிருந்து அரசைப் பாதுகாக்கும்" என்ற பெயரில் அரசு தயாரித்துள்ள புதிய சட்ட வரைவு, நாட்டின் ஜனநாயகத்தையும் அடிப்படை உரிமைகளையும் முற்றாக அழித்துவிடும். அரசமைப்பு வழங்கியுள்ள அடிப்படை உரிமைகளைச் சவப்பெட்டிக்குள் தள்ளும் இந்த மனிதாபிமானமற்ற சட்டமூலம் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டவுடன், அதனை எதிர்த்து நான் உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்வேன் என்று முன்னாள் வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார். இதற்குப் பதிலளிக்கும் வகையில் ஊடகங்களிடம் நீதி அமைச்சர் சட்டத்தரணி ஹர்ஷன நாணயக்கார கருத்து வெளியிடும்போதே மேற்கண்டவாறு



கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"பயங்கரவாதம் என்பது இன்று உலகளாவிய ரீதியில் புதிய வடிவங்களை எடுத்துள்ளது. காலாவதியான சட்டங்களைக் கொண்டு தற்கால சவால்களை எதிர்கொள்ள முடியாது. 'பயங்கரவாதம்' குறித்த விரிவான வரைவிலக்கணம் என்பது குற்றவாளிகள் சட்டத்தின் பிடியிலிருந்து தப்பிப்பதைத் தடுப்பதற்காகவே உருவாக்கப்பட்டுள்ளது. இது சாதாரண பொதுமக்களை எவ்விதத்திலும் பாதிக்காது.

தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படும் போது, உடனடி முடிவுகளை எடுக்க வேண்டிய பொறுப்பு நாட்டின் தலைவருக்கு உண்டு. தடை செய்யப்பட்ட பகுதிகள் மற்றும் அமைப்புகள் குறித்த அறிவிப்புகள் புலனாய்வுத் தகவல்களின் அடிப்படையிலேயே மேற்கொள்ளப்படும். இது தனிப்பட்ட விருப்பங்களுக்கு அப்பாற்பட்டது.

ஊடக சுதந்திரத்தை முடக்கும் நோக்கம் அரசுக்கு இல்லை. ஆனால், பாதுகாப்பு முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகளில் நுழைந்து தகவல்களைச் சேகரிப்பது நாட்டின் பாதுகாப்பைச் சீர்குலைக்கக்கூடும். அத்தகைய தீவிரமான சந்தர்ப்பங்களில் மட்டுமே சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும். பொறுப்புள்ள ஊடகத்துறைக்கு இந்தச் சட்டத்தால் எவ்வித பாதிப்பும் ஏற்படாது.

எதிர்க்கட்சியினர் கூறுவது போல் இது ஒரு மனிதாபிமானமற்ற சட்டம் அல்ல. சர்வதேச மனித உரிமைத் தரநிலைகளை உள்வாங்கியே இந்தப் புதிய வரைவு தயாரிக்கப்பட்டுள்ளது. யாருக்கேனும் இதில் அதிருப்தி இருப்பின், அதனை நாடாளுமன்ற விவாதங்களின் போதோ அல்லது நீதிமன்றத்தின் ஊடாகவோ அணுகுவதற்குப் பூரண சுதந்திரம் உள்ளது." – என்றார்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### தமிழரசுத் தீர்மானங்களை...

ஆகவே அத்தகைய நடவடிக்கையில் ஈடுபடுவதை கட்சி உறுப்பினர்களும் பிரமுகர்களும் தவிர்த்துக்கொள்ள வேண்டும்.”

– இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச்செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் கட்சி உறுப்பினர்களுக்கு அறிவுறுத்தி இருக்கின்றார்.

கட்சியின் தீர்மானங்களை விமர்சிப்பவர்களுக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கைகள் ஏற்கனவே எடுக்கப்பட்டிருக்கின்றன என்பதைக் கட்சி உறுப்பினர்களுக்குத் தமிழரசுக் கட்சியின் பிரதேச சபைகளின் தவிசாளர்கள் தெரியப்படுத்த வேண்டும் என்று குறிப்பிட்டுள்ள அவர், அனைத்து முறைப்பாடுகள் சம்பந்தமாகவும் நடவடிக்கை எடுக்க வேண்டிய கட்டாய தேவை இருப்பதினால், மேலும் எவரையும் சங்கடத்திற்கு உட்படுத்தாமல் நடந்து கொள்ளுமாறு கட்சியின் அனைத்து உறுப்பினர்களுக்கும் அறிவுறுத்தல் வழங்க வேண்டும் என்று தவிசாளர்களைக் கேட்டிருக்கின்றார்.

கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், பிரதேச சபை தலைவர்கள், உறுப்பினர்கள் மற்றும் முக்கிய பிரமுகர்களுக்கு இது பற்றிய தகவல்களை அவர் வழங்கியிருக்கின்றார் எனத் தெரிகின்றது.

கட்சியின்தலைவர்சி.வி.கே.சிவஞானத்தின் ஆலோசனையின் அடிப்படையில் இந்த அறிவுறுத்தலை அவர் தெரியப்படுத்தி இருக்கின்றார் என அறியவந்தது.

### மணல் கடத்தல்...

துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர்.

புளியம்பொக்கணைப் பகுதியில் இருந்து சட்டவிரோதமான முறையில் மணல் ஏற்றிச் சென்ற மகேந்திரா கப் ரக வாகனம்ஒன்றையேபொலிஸார்தேராவில் பகுதியில் மறித்தனர். இதன்போது, பொலிஸாரின் சமிக்கையை மீறி அந்த வாகனம் நிறுத்தாமல் அதிவேகமாகச் செல்ல முற்பட்டது.

இதனைத் தொடர்ந்து, அந்த வாகனத்தை நோக்கிப் பொலிஸார் ஐந்து தடவைகள் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர். இதில் வாகனத்தின் சக்கரம் சேதமடைந்து வாகனம் செயலிழந்த நிலையில், அதன் சாரதி வாகனத்தை விட்டு இறங்கித் தப்பியோடினார்.

இந்தச் சம்பவத்தின் போது எவருக்கும் எவ்வித காயங்களும் ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கைப்பற்றப்பட்ட வாகனம் தற்போது பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ள நிலையில், தப்பியோடிய சாரதியைக் கைது செய்வதற்கான மேலதிக விசாரணைகளைத் தர்மபுரம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

### யாழ். மாநகர...

தொடர்ந்து, ஈ.பி.டி.பி. உறுப்பினர்கள் பிரேரணையைக் கிழித்தெறிந்து சபையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர்.

யாழ். மத்திய பஸ் நிலையச் சூழலில் அமைந்துள்ள அப்பிள் கடைகளை அகற்றுவது தொடர்பாக மாநகர சபை உறுப்பினர் ப. தர்சானந்தினால் கொண்டுவரப்பட்ட பிரேரணைக்கு எதிர்ப்புத் தெரிவித்து, பாதிக்கப்பட்ட வியாபாரிகள் இன்று காலை மாநகர சபை முன்பாகப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இன்றைய சபை அமர்வின் போது இவ்விடயம் குறித்துக் கருத்து வெளியிட்ட ஈ.பி.டி.பி. உறுப்பினர்கள், முறையான மாற்றுத் திட்டம் அல்லது பொறிமுறை இன்றி இவ்வாறான பிரேரணைகளைக் கொண்டுவரக் கூடாது என வலியுறுத்தினர்.

பாதிக்கப்பட்ட வியாபாரிகளின் வாழ்வாதாரத்தை உறுதிப்படுத்தும் வகையில் இப்பிரேரணை மறுபரிசீலனை செய்யப்பட வேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

எனினும், இந்த விடயத்தில் மேயர் அலட்சியப் போக்குடன் செயற்பட்டார் என்றும், உரிய தீர்வை வழங்காது நிகழ்ச்சி நிரலின் அடிப்படையில் சபையை முன்னெடுத்துச் சென்றார் என்றும் ஈ.பி.டி.பி. உறுப்பினர்கள் குற்றம் சாட்டினர். மேயரின் இந்தச் செயலைக் கண்டித்த அவர்கள், குறித்த பிரேரணையைக் கிழித்தெறிந்து தமது எதிர்ப்பைப் பதிவு செய்ததுடன், சபையை விட்டு வெளியேறினர்.

அப்பிள் கடை வியாபாரிகளின் போராட்டம் மற்றும் சபைக்குள் ஈ.பி.டி.பி. உறுப்பினர்களின் அதிரடி வெளிநடப்பு காரணமாக யாழ். மாநகர சபை வளாகத்தில் இன்று பெரும் பரபரப்பு நிலவியது.

### அறகலயவின் மூலம்...

அதற்குப் பின்னர் 1972ஆம் ஆண்டு இலங்கை குடியரசாகிய போது கொண்டுவரப்பட்ட குடியரசு அரசியல் சாசனத்திற்கு எதிராகவும் தமிழ் மக்கள் கறுப்புக்கொடி போராட்டங்களை முன்னெடுத்து வந்துள்ளமையுடன் அவற்றை கரிநாள்களாகவும் பிரகடனப்படுத்தி வந்துள்ளனர்.

இலங்கை என்பது சிங்கள, தமிழ் இராசதானிகளாக பிளவுபட்டு இருந்ததென்பதும் 1883ஆம் ஆண்டு காலனித்துவ ஆட்சியாளர்களான பிரித்தானியர்களால் தமது நிர்வாக வசதிக்காக ஒன்றாக்கப்பட்டது என்பதுதான் வரலாறு. ஒன்றிணைத்த இராசதானிகளை சிலோன் என்ற பெயரில் சூழ்ச்சியின் காரணமாக பெரும்பான்மையினமான சிங்கள தரப்பிடம் கையளித்து விட்டுச் சென்றார்கள் என்பதும் வரலாறு.

ஆகவே, இவ்வாறான சுதந்திர தினத்தையோ அல்லது குடியரசு தினத்தையோ தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளவில்லை என்பதுடன் பெரும்பான்மை சிங்கள அரசுகளால் தமிழ் மக்களின் மொழியுரிமை, வாழ்விட உரிமை, கல்வி உரிமை, வேலைவாய்ப்புக்கான உரிமை போன்றவை பல்வேறு வழிகளில் நிராகரிக்கப்பட்டு தமது சுதந்திரத்தைத் தாமே பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற நிலைக்கு தமிழ் மக்கள் தள்ளப்பட்டதன் காரணமாகத்தான் இங்கு நீண்டதோர் ஆயுதப்போராட்டமே நடைபெற்றது.

எனவே, தமிழ் மக்கள் ஏன் போராடுகிறார்கள்? அரசின் தமிழர்களுக்கு எதிரான அனைத்துச் செயற்பாடுகளையும் ஏன் எதிர்க்கிறார்கள்? ஏன் கறுப்புக்கொடி ஏற்றுகின்றார்கள்? ஏன் ஊர்வலங்களையும் கவனவீர்ப்புப் போராட்டங்களையும் நடத்துகின்றார்கள்? – என்பதற்கு அரசு சரியான தீர்வைக் கண்டுகொள்ள வேண்டுமே தவிர, ஜனநாயகபூர்வமான எதிர்ப்பைக் காட்டும் மக்களையோ மாணவர்களையோ தண்டிப்பதானது ஜனநாயக விரோதமானதும் சட்டவிரோதமானதுமாகும்.

இலங்கையின் அடிப்படை உரிமைகளில் பேச்சுரிமை, எழுத்துரிமை, ஒன்றுகூடுவதற்கான உரிமை, ஜனநாயக வழிமுறைகளில் கறுப்புக்கொடி ஏற்றுதல் உட்பட எதிர்ப்புத் தெரிவிப்பதற்கான உரிமைகள் வழங்கப்பட்டுள்ளன. இலங்கையில் துக்கத்தை வெளிப்படுத்துவதற்கு கறுப்புக்கொடி ஏற்றுவது இயல்பானது.

தமிழ் மக்கள் அடக்கப்பட்டு ஒடுக்கப்படுகின்றார்கள் என்பதும் தமிழ் மக்களுக்கு முழுமையான சுதந்திரம் கிடைக்கவில்லை என்பதும் துக்ககரமான செயற்பாடே. அவ்வாறான துக்ககரமான செயற்பாட்டின்போது பல்கலைக்கழகத்திலோ அல்லது வேறு எந்த இடத்திலோ கறுப்புக் கொடி கட்டுவது சட்டவிரோதம் என சட்டத்தில் எங்கும் குறிப்பிடப்படவில்லை. மக்களுக்கோ அன்றில் சொத்துக்களுக்கோ எவ்வித இடையூறும் விளைவிக்காமல் மக்கள் தமது எதிர்ப்பைக் காட்டுவது என்பது ஜனநாயகபூர்வமான நடவடிக்கையே.

கடந்த 4ஆம் திகதி யாழ் பல்கலைக்கழத்தில் கறுப்புக்கொடி ஏற்றிய மாணவர்களுக்கு எதிராக விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும், அவர்கள் தண்டிக்கப்பட வேண்டும் என பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு கோருவதும் அதனைப் பல்கலைக்கழக நிர்வாகம் ஏற்பதும் சட்டவிரோதமானதுடன் ஜனநாயக விரோதமானதுமாகும் என ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி கருதுகின்றது.

மாணவர்களின் அடிப்படை உரிமைகளிலோ ஜனநாயக வழிமுறையிலான போராட்டங்களிலோ தலையீடு செய்யாமல் அவர்கள் சுதந்திரமாகவும் அச்சவுணர்வின்றியும் தமது கல்வியைத் தொடர பல்கலைக்கழக ஆசிரிய சமூகம் அதற்கான பொதுவெளியை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கின்றோம்.

பல்வேறுபட்ட மாணவர் போராட்டத்தை நடத்தி மிகப் பிரமாண்டமான அறகலய போராட்டத்தின் மூலம் ஆட்சிக்கு வந்தவர்கள் தமிழ் மாணவர்களின் ஜனநாயக பூர்வமான போராட்டங்களை நசுக்குவதோ அன்றி அவர்களைத் தண்டிப்பதோ சரியானதா என்பதை ஆட்சியிலிருப்பவர்கள் சிந்திக்க வேண்டும்.” – என்றுள்ளது.

### திஸ்ஸ விதாரண...

தலைவர் முன்னாள் அமைச்சர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண (வயது 91) காலமானார்.

உடல்நலன் பாதிக்கப்பட்டிருந்த அவர், ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டேயில் உள்ள அவரது இல்லத்தில் இன்று காலை காலமானார் என்று குடும்ப உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

பேராசிரியர் திஸ்ஸ விதாரண 2004ஆம் ஆண்டு தொடக்கம், 2015ஆம் ஆண்டு வரை நாடாளுமன்றத்தில் தேசியப் பட்டியல் உறுப்பினராக அங்கம் வகித்தார்.

அவர் மஹிந்த ஆட்சியில் விஞ்ஞான தொழில்நுட்ப அமைச்சராகவும் பதவி வகித்திருந்தார். சிரேஷ்ட அமைச்சராகவும் பதவி வகித்துள்ளார்.

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்காக மஹிந்த ஆட்சியில் நியமிக்கப்பட்ட சர்வகட்சி பிரதிநிதிகள் குழுவின் தலைவராகவும் பேராசிரியர் திஸ்ஸ விதாரண செயற்பட்டார்.

அவரது மறைவு தொடர்பில் அரசியல் பிரமுகர்கள் பலரும் அனுதாபம் தெரிவித்துள்ளனர்.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# குழந்தைகளுக்கும் புற்றுநோய்

இலங்கையில் புற்றுநோய்ப் பாதிப்பு அபாயகரமான நிலையை எட்டியுள்ளதாகச் சுகாதார பிரதி அமைச்சர் வைத்தியர் ஹம்சக விஜேமுனி தெரிவித்துள்ளார்.

கொழும்பு தேசிய வைத்திய சாலையின் வெளிநோயாளர் பிரிவு வளாகத்தில் அமைந்துள்ள தொற்றுநோய் சிகிச்சைக் கட்டடத் தின் முதலாவது மாடியில், 'புற்று நோயை முன்கூட்டியே கண்டறி யும் புதிய மத்திய நிலையம்' அண்மையில் திறந்து வைக்கப் பட்டது. இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே பிரதி அமைச்சர் அதிர்ச்சியூட்டும் இந்தத் தகவல்களை வெளியிட் டார்.

இலங்கையில் ஒவ்வொரு நாளும் சுமார் 100 புதிய புற்றுநோயா ளர்கள் அடையாளம் காணப்படு கின்றனர். இந்நோய் காரணமாகத் தினமும் சுமார் 40 பேர் வரை உயிரிழக்கின்றனர்.

பெரும்பாலான நோயாளர்கள் புற்றுநோயின் முற்றிய நிலையி லேயே (பிற்காலக் கட்டங்களில்) சிகிச்சைக்காக வருகின்றனர். இதுவே அதிக உயிரிழப்புகளுக் குக் காரணமாகிறது.

தேசிய புற்றுநோய்த் தடுப்புத் திட்டம் வெளியிட்டுள்ள தரவு களின்படி நாள்தோறும் 15 பெண் கள் மார்பகப் புற்றுநோய்க்கு உள்ளாகின்றனர். அவர்களில் தின சரி மூவர் உயிரிழக்கின்றனர்.

இதே சமயம் நாடு முழுவதும் ஒரு வருட காலத்திற்குள் மொத் தம் சுமார் 900 குழந்தைகள் புற்று நோயால் பாதிக்கப்பட்டுள்ளமை பதிவாகியுள்ளது என சுகாதார மேம்பாட்டுப் பணியகம் தெரி வித்துள்ளது.

அடுத்த மூன்று ஆண்டுகளில் குழந்தை புற்றுநோய் நோயாளி களுக்கு சிகிச்சையளிப்பதற்குத் தேவையான அனைத்து அத்தியா வசிய மருந்துகளையும் வழங்க சுகாதார அமைச்சு தீர்க்கமான ஒழுங்குகளைச் செய்திருக்கின்றது. இந்த ஏற்பாட்டின் கீழ், அனைத்து அத்தியாவசிய மருந்துகளும் இல வசமாக வழங்கப்படும். பாதிக்கப பட்ட குழந்தைகளுக்கு தடையற்ற சிகிச்சை உறுதி செய்யப் படும். இந்த மூன்று ஆண்டு திட்டத்தின் மூலம் குழந்தைப் புற்றுநோய் பராமரிப்பு சேவைகள் வலுப்படுத் தும். குழந்தைப் பருவ புற்று நோயுடன் தொடர்புடைய சவால் களை எதிர்கொள்ளும் குடும்பங் களுக்கு மிகவும் தேவையான நிவா ரணத்தை அரசு வழங்கும் என்றும் சுகாதார அதிகாரிகள் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

புற்றுநோயை ஆரம்ப கட்டத் திலேயே - முன்கூட்டியே - கண்ட றிவது முக்கியம். அப்படிக் கண்ட றிவது சரியான நேரத்தில் மருத் துவ தலையீட்டை செயல்படுத்து வதிலும் சிகிச்சை விளைவுகளை கணிசமாக மேம்படுத்துவதிலும் முக்கிய பங்கு வகிக்கிறது என்று தேசிய புற்றுநோய் கட்டுப்பாட்டு திட்டத்தின் ஆலோசகர் சமூக மருத்துவர் மருத்துவர் சூரஜ் பெரேரா தெரிவித்துள்ளார்.

கடந்த 25 ஆண்டுகளில் புற்று நோய்ப் பாதிப்பு இருமடங்காகி யுள்ளதுடன், மருத்துவமனை மரணங்களில் 14 வீதமானவை புற்றுநோயால் ஏற்படுகின்றன எனத் தெரிவிக்கப்படுகின்றது. பெண்களில் மார்பகப் புற்று நோயும், ஆண்களில் வாய் மற்றும் தொண்டைப் புற்றுநோயும் அதிக மாகக் காணப்படுகின்றன.

74 ஆவது வயது வரையான 61 ஆண்களில் பத்துப் பேருக்கும், 66 பெண்களில் பத்துப் பேருக்கும் புற்றுநோய் ஏற்படும் ஆபத்து உள்ளது என எச்சரிக்கப்படு கின்றது.

# திருமலை, காங்கேசன்துறை துறைமுகங்களை இந்தியாவுக்கு தாரைவார்க்க அரசாங்கம் முயற்சி

## அனைவரும் அணிதிரள வேண்டுமென்கிறார் விமல் வீரவன்ச



“காங்கேசன்துறை துறைமுகம் மற்றும் திருகோணமலைத் துறைமுகம் ஆகிய துறைமுகங்களை இந்தியாவுக்கு தாரைவார்க்க அரசாங்கம் முயற்சிக்கிறது. அரசாங்கத்தின் இந்திய மயமாக்கலுக்கு எதிராக அனைவரும் அணி திரள வேண்டும்.”

– இவ்வாறு தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச அழைப்பு விடுத்தார்.

கொழும்பில் உள்ள தேசிய சுதந்திர முன்னணியின் காரியாலயத்தில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

“இலங்கையின் மேற்பரப்பு மற்றும் கடல் தளத்திலுள்ள அரிய கனிம வளங்களை வரைபடமாக்குதல், அடையாளம் காணுதல் மற்றும் வெட்டியெடுப்பதை இந்திய நிறுவனங்களுக்கு ஒப்படைக்க இந்த ஒப்பந்தம் திட்டமிட்டுள்ளது.இந்த ஒப்பந்தம், இரு அரசாங்கங்களின் ஒப்பந்தத்துடன் இந்திய நிறுவனங்களுக்கு கனிம மயமாக்கப்பட்ட பகுதிகளை ஒதுக்கவும், இந்திய பொது மற்றும் தனியார் துறைகளின் முதலீடுகளை ஊக்குவிக்கவும் திட்டமிட்டுள்ளது.

சிலோன் கிராஃபைட், நீல சபையர், புல்முடே கனிம மணல், உயர் தர சிலிக்கா, ராக் பாஸ்பேட், டோலமைட் மற்றும் கடலுக்கு அடியில் உள்ள கோபால்ட் படிவுகள் போன்ற வளங்களை இந்த ஒப்பந்தத்தின் மூலம் இந்தியா கையகப்படுத்தும் அபாயம் உள்ளது. இந்த வளங்கள் தொழில்நுட்பத் தொழில்களுக்கு அவசியமானவை. இந்த முடிவு நாட்டின் பொருளாதாரத்திற்கு மிகவும் முக்கியமானது.

இந்தத் திட்டத்தில் மக்கள் விடுதலை முன்னணி மற்றும் தேசிய மக்கள் கட்சி ஈடுபட்டுள்ளது. மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச்செயலாளர் டில்வின் சில்வாவின் இந்திய விஜயம், ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் இந்திய விஜயம் இந்த ஒப்பந்தத்தை விரைவுபடுத்துவதில் தாக்கத்தை ஏற்படுத்தும்.

இலங்கையில் இந்திய மயமாக்கலுக்கு எதிராகப் போராடிய ஒரு கட்சியாக மக்கள் விடுதலை முன்னணி ஆரம்பத்தில் காணப்பட்டது. இந்த நடவடிக்கை துரோகமானது, மக்கள் ஒன்றுபட்டு அதற்கு எதிராகப் போராட வேண்டும்.

காங்கேசன்துறை மற்றும் திருகோணமலை துறைமுகங்களை இந்திய மயமாக்கும் முடிவுகள் மற்றும் மருந்து சந்தையை இந்திய மருந்துகளால் நிரப்ப ஏழு இரகசிய ஒப்பந்தங்கள் போன்ற இந்தியா தொடர்பான பிற திட்டங்களையும் அரசாங்கம் முன்னெடுத்துள்ளது. அரசாங்கத்தின் இந்த செயற்பாடுகளுக்கு எதிராக நாட்டு மக்கள் ஒன்றிணைய வேண்டும்.”– என்றார்.





# எதிர்க்கட்சிகளின் குற்றச்சாட்டுக்கு பதிலளித்து காலத்தினை வீணடிப்பதற்கு விரும்பவில்லை

## பிரதமர் ஹறிணி தெரிவிப்பு

"எதிர்கட்சியினர் முன்வைக்கும் விமர்சனங்கள் மற்றும் குற்றச்சாட்டுகளுக்கு பதிலளித்து காலத்தை வீணடிக்க போவதில்லை. புதிய கல்வி மறுசீரமைப்பு சிறந்த முறையில் அமுல்படுத்தப்படும்."

– இவ்வாறு பிரதமர் கலாநிதி ஹறிணி அமரசூரிய தெரிவித்தார்.

பெலியத்த றுஹுணு விஜயபா தேசிய பாடசாலைக்கு நேற்று வியாழக்கிழமை விஜயம் செய்த பிரதமர், முதலாம் தரத்துக்கான புதிய கல்வி மறுசீரமைப்பு நடவடிக்கைகளை ஆராய்ந்ததன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

"புதிய கல்வி மறுசீரமைப்புக்கான நடவடிக்கைகளை சிறந்த முறையில் மேற்கொண்டுள்ளோம்.தரம் ஒன்றுக்கான கல்வி மறுசீரமைப்பு தற்போது நாடளாவிய ரீதியில் அமுல்படுத்தப்பட்டுள்ளது. அந்நடவடிக்கைகள் தொடர்பில் பாடசாலையின் அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளோம்.

இலவச கல்வி தற்போதைய தொழிற்றுறைக்கு பொறுத்தமான வகையில் மறுசீரமைக்கப்படும். தொழில்நுட்ப ரீதியில் ஏற்பட்ட குறைகள் தற்போது திருத்தப்படுகிறது.

எதிர்கட்சியினர் முன்வைக்கும் விமர்சனங்கள் மற்றும் குற்றச்சாட்டுகளுக்கு பதிலளித்து காலத்தை வீணடிக்க போவதில்லை. புதிய கல்வி மறுசீரமைப்பு சிறந்த முறையில் அமுல்படுத்தப்படும்.

அரசாங்கத்தின் செயற்பாடுகள் மற்றும் முன்னேற்றம் எதிர்க்கட்சியினரின் தக்க பதிலாக அமையும். விமர்சித்துக் கொண்டிருப்பவர்கள் அதனையாவது சிறந்த முறையில் செய்யட்டும்."– என்றார்.













# இந்தியா - பாக். தொடரை முன்னிட்டு விசேட பாதுகாப்பு திட்டம் முன்னெடுப்பு

கொழும்பில் எதிர்வரும் 15ஆம் திகதி நடைபெறவுள்ள இந்தியா – பாகிஸ்தான் இடையிலான ஐ.சி.சி. இருபதுக்கு 20 உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரை முன்னிட்டு விசேட பாதுகாப்பு திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் எப்.யு. வுட்லர் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

“இந்தியா – பாகிஸ்தான் இடையிலான ஐ.சி.சி. இருபதுக்கு 20 உலகக் கிண்ண கிரிக்கெட் தொடர் கொழும்பு ஆர். பிரேமதாச சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் எதிர்வரும் 15 ஆம் திகதி நடைபெறவுள்ளது.



இந்த கிரிக்கெட் தொடர் மாலை 07.00 மணிக்கு ஆரம்பிக்கப்படவுள்ளது.

ஆனால் கொழும்பு ஆர். பிரேமதாச சர்வதேச கிரிக்கெட் மைதானத்தின் நுழைவாயில் பிற்பகல் 03.00 மணி முதல் திறந்து வைக்கப்படும்.

எனவே கிரிக்கெட் தொடர் ஆரம்பிப்பதற்கு சில மணி நேரத்திற்கு முன்னரே மைதானத்திற்கு வருகை தரவேண்டும்.” என்று தெரிவித்துள்ளார்.



# அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியாது

## ஹன்சக விஜயமுனி தெரிவிப்பு



"வைத்தியர்களின் பிரச்சினைக்கு தீர்வு காண முடியும். ஆனால் அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் பிரச்சினைக்கு தீர்வுகாண முடியாது. ஏனெனில் அது அரசியல் பிரச்சினையாகும்."

– இவ்வாறு சுகாதார பிரதி அமைச்சர் ஹன்சக விஜயமுனி தெரிவித்தார்.

சுகாதார அமைச்சில் நேற்று இடம் பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் குறிப்பிடுகையில்,

"அரச வைத்தியர்களின் பிரச்சினையை எங்களுக்கு தீர்க்க முடியும் ஆனால் அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் பிரச்சினையை எங்களால் தீர்க்க முடியாது. ஏனெனில் அது அரசியல் பிரச்சினையாகும். அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் அரசில் அமைப்பொன்றை போன்றே செயற்பட்டு வருகிறது.

அதனால் வைத்தியர்களின் பிரச்சினையை வைத்தியர்களின் பிரச்சினையாக புரிந்துகொள்ளவும் அரச வைத்திய அதிகாரிகளின் பிரச்சினையை அரசியல் பிரச்சினையாக புரிந்துகொள்ளவும் அரசாங்கம் என்ற வகையில் எங்களுக்கு அந்த திறமையும் பலமும் இருக்கிறது.

அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தற்போது தொழிற்சங்க நடவடிக்கை மேற்கொள்வதாக தெரிவித்தாலும், வைத்தியசாலைகளில் அவ்வாறான தொழிற்சங்க நடவடிக்கை ஒன்றை காணக்கூடியதாக இல்லை.

அதனால், அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தொழிற்சங்க நடவடிக்கை ஒன்றை மேற்கொண்டுள்ளதாக தெரிவித்திருக்கின்றது. ஆனால், அவ்வாறான தொரு உணர்வை காணக்கூடியதாக இல்லை. வைத்தியர்கள் வழமை போன்று வந்து செல்கிறார்கள்.

அதனால் அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தொடர்ந்தும் தொழிற்சங்க நடவடிக்கையை முன்னெடுத்துச் செல்லட்டும். அது அவ்வாறே நீர்த்துப்போய்விடும்."– என்றார்.

# மருந்துத் தட்டுப்பாட்டைத் தவிர்ப்பதற்கு வைத்தியசாலைகளில் மாதாந்த மீளாய்வு

## சுகாதார அமைச்சு புதிய திட்டம்

தரம் குறைந்த மருந்துகளை இறக்குமதி செய்தமை தொடர்பான விசாரணைகள் தீவிரமடைந்துள்ள நிலையில், மருந்து விநியோகத்தில் நிலவும் தட்டுப்பாடுகளைத் தவிர்க்கும் பொருட்டு ஒவ்வொரு வைத்தியசாலையிலும் மாதாந்த மீளாய்வுக் கூட்டங்களை நடத்த சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

தரம் குறைந்த மருந்துகளை இறக்குமதி செய்து வைத்தியசாலைகளுக்கு விநியோகித்ததாக முன்வைக்கப்பட்ட முறைப்பாடுகள் குறித்து முறையான விசாரணைகளை முன்னெடுக்க இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

"ஊழல் மற்றும் வீணடிப்புக்கு எதிரான மக்கள் சக்தி" அமைப்பினால் கடந்த 2025 டிசம்பரில் அளிக்கப்பட்ட முறைப்பாடுகளின் அடிப்படையிலேயே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தரம் குறைந்த ஊசி மருந்து செலுத்தப்பட்ட பின்னர் வைத்தியசாலையொன்றில் இரண்டு நோயாளிகள் உயிரிழந்ததாகக் கூறப்படும் சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இந்நிலையில் நிறுவனமொன்று தரம் குறைந்த மருந்துகளை 100 இற்கும் மேற்பட்ட சந்தர்ப்பங்களில் இறக்குமதி செய்துள்ளதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளதுடன், தரம் தொடர்பான சிக்கல்களால் 10 வகையான ஊசி மருந்துகளை உடனடியாக மீளப்பெறுமாறு தேசிய மருந்துகள் ஒழுங்குமுறை அதிகாரசபை உத்தரவிட்டுள்ளது.

வாந்தி மற்றும் பாக்டீரியா தொற்றுக்கான மருந்துகள், மனநலம் மற்றும் இரும்புச்சத்து குறைபாட்டிற்கான ஊசி மருந்துகள், தீவிர தொற்று நோய்களுக்கான நுண்ணுயிர் எதிர்ப்பிகள் ஆகியன மீளப்பெறப்பட்ட முக்கிய மருந்துகளாகும்.

# காட்டு யானையின் தாக்குதலில் பெண் உயிரிழப்பு, மூவர் காயம்

## வாழைச்சேனை நகருக்குள் புகுந்து அட்டகாசம்



(மட்டக்களப்பு நிருபர்)

மட்டக்களப்பு, வாழைச்சேனை நகருக்குள் புகுந்த காட்டு யானை நடத்திய தாக்குதலில் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார். மேலும் மூவர் காயமடைந்துள்ளனர்.

இன்று வெள்ளிக்கிழமை அதிகாலை வேளையில் ஊருக்குள் நுழைந்த இந்த யானை, வீதிகளில் சென்றவர்கள் மீதும் குடியிருப்புகள் மீதும் திடீர் தாக்குதலை மேற்கொண்டுள்ளது.

தாக்குதலுக்குள்ளான பெண் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார். காயமடைந்த மற்றவர்கள் உடனடியாக மீட்கப்பட்டு வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நகரப் பகுதிக்குள் யானை புகுந்ததால் பொதுமக்கள் பெரும் பீதியடைந்துள்ளனர்.

காட்டு யானைகள் மட்டக்களப்பு மாவட்டத்தில் கிராமங்களுக்குள் மாத்திரமின்றி நகர் பகுதிகளுக்குள்ளும் ஊடுருவி தாக்கி வருகின்றமை மக்கள் மத்தியில் பெரும் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

# சமூக சக்தி செயல்திட்டம் தொடர்பாக விழிப்புணர்வூட்டும் விசேட செயலமர்வு









(எஸ்.கீதபொன்கலன்)

திருகோணமலை மாவட்டத்தில் சமூக சக்தி செயல்திட்டத்தை எவ்வாறு நடைமுறைப்படுத்துவது என்பது தொடர்பில் கிராமிய மட்ட குழுக்களின் தலைவர்கள், செயலாளர்கள், பிரதேச செயலாளர்கள் மற்றும் தொடர்புடைய அலுவலர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் விசேட செயலமர்வு இன்று திருகோணமலை மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

இதன்போது, கிராமிய அபிவிருத்தி, சமூக பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் பிரதி அமைச்சர் வசந்த பியதிஸ்ஸ முதன்மை விருந்தினராக கலந்து கொண்டு பிரதான உரையை ஆற்றினார்.

மாவட்டத்தின் 230 கிராம சேவகர் பிரிவின் 230 சமூக சக்திக் குழுக்களின் தலைவர்களும்,செயலாளர்களும் இந்த விசேட செயலமர்வில் கலந்து கொண்டனர்.

தமிழ் மற்றும் சிங்கள மொழிகளில் தனித்தனியாக இந்த செயலமர்வு நடைபெற்றது.

இந்த நிகழ்வில், வெளிவிவகார மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்புகள் பிரதி அமைச்சர் அருண் ஹேமசந்ரா, மாவட்ட செயலாளர் மற்றும் சமூக பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சின் பணிப்பாளர் ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர்.

# பளை மாசார் பகுதியில் 23 கிலோ கஞ்சா மீட்பு

(மரியசீலன் திலைக்ஸ்)

யாழ்ப்பாணம், பளை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மாசார் பகுதியில் நேற்று 23 கிலோ கிராமிற்கு அதிகமான கேரள கஞ்சா மீட்கப்பட்டுள்ளது.

பளை இராணுவ அதிகாரிகளுக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் பளை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மாசார் சோரன்பற்று காட்டுப் பகுதியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 23 கிலோ 550 கிராம் நிறையுடைய கேரள கஞ்சா மீட்கப்பட்டுள்ளது.



மீட்கப்பட்ட கேரள கஞ்சா பளை பொலிஸாரிடம் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக ஒப்படைக்கப்பட்டதுடன், சம்பவம் தொடர்பாக சந்தேக நபர்கள் கைது செய்யப்படாத நிலையில், பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துவருகின்றனர்.

# பகுதிநேர வேலைவாய்ப்புகளை முறையாக அங்கீகரிக்கும் வகையில் சட்டத்தில் திருத்தம்

இலங்கையில் பகுதிநேர வேலைவாய்ப்புகளை முறையாக அங்கீகரிக்கும் வகையில், தொழிலாளர் சட்டங்களில் திருத்தங்களை மேற்கொள்ள அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

தொழில் அபிவிருத்தி பிரதியமைச்சர் சதுரங்க அபேசிங்க இதனைத் தெரிவித்துள்ளார்.

தொழில்நுட்பப் பயிற்சிகளில் ஈடுபடும் இளைஞர்கள், தமது வாழ்வாதாரத்திற்காக முழுநேர வேலையில் ஈடுபட வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதனால், அவர்கள் பயிற்சியைப் இடைநடுவில் கைவிடும் நிலை ஏற்படுகின்றது.

இதனைத் தவிர்க்கவே பகுதிநேர வேலைக்கான சட்டப்பூர்வ அந்தஸ்து அவசியம் என்றும் பிரதியமைச்சர் சதுரங்க அபேசிங்க வலியுறுத்தியுள்ளார்.






# தபால் சேவையை நவீனமயமாக்குவதற்கு புதிய வாகனங்கள் சேவையில் இணைப்பு

இலங்கை தபால் சேவையை நவீனமயமாக்கும் ஒரு பகுதியாக, 590 மில்லியன் ரூபாவிற்கும் அதிக பெறுமதியுள்ள 10 லொறிகள் மற்றும் 20 கப் வாகனங்கள் நேற்று தபால் போக்குவரத்து வலையமைப்பில் இணைக்கப்பட்டன.

இந்த முழுமையான திட்டத்திற்காக அரசாங்கம் மொத்தம் 849 மில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளது.

தபால் தலைமையகத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வில் சுகாதார மற்றும் ஊடகத்துறை அமைச்சர் கலாநிதி நளிந்த ஜயதிஸ்ஸ மற்றும் பிரதி அமைச்சர் கலாநிதி கௌஷல்யா ஆரியரத்ன ஆகியோர் கலந்துகொண்டனர்.

நாடளாவிய ரீதியில் தபால் பொருள்கள், பணம் செலுத்திப் பெற்றுக்கொள்ளும் சேவை மற்றும் SL Post Courier சேவைகளை விரைவுபடுத்த புதிய வாகனங்கள் பயன்படுத்தப்படவுள்ளன.

அத்துடன். தபால் நடவடிக்கைகளை ஒருங்கிணைக்க புதிய "செயற்பாட்டுக் கட்டுப்பாட்டு மற்றும் பதிலளிப்புப் பிரிவு" திறந்து வைக்கப்பட்டது.

தபால் தலைமையகம், மத்திய தபால் பரிவர்த்தனை நிலையம் மற்றும் மட்டக்களப்பு தபால் நிலையம் ஆகியவற்றில் சூரிய சக்தித் தகடுகளும் பொருத்தப்படவுள்ளன.

கடந்த ஆண்டு இரண்டு பாரிய சவால்கள் ஏற்பட்ட போதிலும், தபால் திணைக்களம் 13,450 மில்லியன் ரூபாவை வருமானமாகப் ஈட்டியுள்ளதாக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

மேலும், சேவையை வலுப்படுத்த 2,800 பணியாளர்கள் புதிதாக இணைக்கப்படவுள்ளனர் எனவும் அவர் குறிப்பிட்டார்.

தபால் சேவையை மேலும் நவீனப்படுத்தி அதன் எதிர்காலத்தைப் பாதுகாப்பதில் அரசாங்கம் உறுதியாக இருப்பதாகவும், பொதுமக்கள் இந்த சேவைகளை அதிகளவில் பயன்படுத்துமாறும் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ இதன் போது கேட்டுக்கொண்டார்.


















# கொழும்பில் அதிர்ச்சி!

## ஆஸ்திரேலியாவை பந்தாடியது சிம்பாப்வே

ரி-20 உலகக் கிண்ணத் தொடரில் இன்று மதியம் கொழும்பில் வைத்து ஆஸ்திரேலியாவுக்கு அதிர்ச்சி கொடுத்து வெற்றிபெற்றது சிம்பாப்வே அணி.

ரி-20 உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரை இலங்கை மற்றும் இந்தியா இணைந்து நடத்துகின்றன.

இந்தத் தொடரில் இன்று கொழும்பில் நடைபெற்ற 19ஆவது போட்டியில் சிம்பாப்வே மற்றும் ஆஸ்திரேலியா அணிகள் மோதின.

இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வென்ற ஆஸ்திரேலியா அணி முதலில் பந்து வீச்சைத் தேர்வு செய்தது.

அதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய சிம்பாப்வே அணி 2 விக்கெட்டுகள் இழப்புக்கு 169 ஓட்டங்களைக் குவித்தது.

சிம்பாப்வே அணியின் தொடக்க வீரர் ப்ரியன் ஆட்டமிழக்காமல் 56 பந்துகளில் 64 ஓட்டங்களை (7 பௌண்டரிகள், 2 சிக்ஸர்கள்) அடித்து அசத்தினார்.

பின்னர் 170 ஓட்டங்கள் என்ற வெற்றியிலக்கு நோக்கிக் களமிறங்கியது ஆஸ்திரேலிய அணி.

அதன்படி தொடக்க வீரர்களாக ஜோஸ் இங்கிலிஸ் மற்றும் டிராவிஸ் ஹெட் ஆகியோர் களமிறங்கினர். இங்கிலிஸ் 8 ஓட்டங்களுடனும் அடுத்து வந்த கமரூன் கிரீன், டிம் டேவிட் டக் ஆகியோர் விரைவாக ஆட்டமிழந்து அதிர்ச்சி அளித்தனர். தொடர்ந்து டிராவிஸ் ஹெட் 17 ஓட்டங்களுடன் வெளியேறினர்.

பின்னர் மக்ஸ்வெல்- மேட் ரென்ஷா ஜோடி சேர்ந்து அணியை சரிவில் இருந்து மீட்கப் போராடினர்.

நிதானமாக விளையாடிய மக்ஸ்வெல் 32 பந்துகளில் 31 ஓட்டங்களைச் சேர்த்து ஆட்டமிழந்தார்.

அடுத்து வந்த ஸ்டோய்னிஸ் 6, பென் த்வார்ஸுயிஸ் 6 என ஆட்டமிழந்தனர்.

ஒரு முனையில் அதிரடியாக விளையாடிய மேட் ரென்ஷா அரைச் சதம் அடித்து அணிக்கு நம்பிக்கை அளித்தார். தொடர்ந்து போராடிய அவர் 65 ஓட்டங்களுடன் வெளியேறினார்.

இதனால் ஆஸ்திரேலியா 19.3 ஓவர்களில் 146 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுகளையம் பறிகொடுத்தது.

இதன்மூலம் சிம்பாப்வே அணி 23 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

சிம்பாப்வே சார்பாக பந்துவீச்சில் முசரபானி 4 விக்கெட்டுகளைக் கைப்பற்றினார். ஆட்டநாயகனாகவும் அவரே தெரிவானார்.

இந்தப் போட்டியில் வென்றதன் மூலம் சிம்பாப்வே அணி, ‘பி’ பிரிவுக்கான புள்ளிப்பட்டியலில் 4 புள்ளிகளுடன் இரண்டாமிடத்துக்கு முன்னேறியது. ஆஸ்திரேலியா மூன்றாம் இடத்துக்குத் தள்ளப்பட்டது. இலங்கை முதலிடத்தில் உள்ளது.

# நிர்மலா சீதாராமன் உரைக்கு பிரதமர் மோடியின் பாராட்டு

வரவு - செலவு திட்டம் மீதான விவாதத்தில் நிர்மலா சீதாராமன் உரைக்கு பிரதமர் மோடி பாராட்டு தெரிவித்துள்ளார்.

மக்களவையில் வரவு - செலவு திட்டம் மீதான விவாதத்தில் மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் பதில் உரையாற்றினார்.

அதைப் பாராட்டி எக்ஸ் தளத்தில் பிரதமர் மோடி வெளியிட்டுள்ள பதிவில்,



"நாட்டின் பொருளாதார மாற்றத்துக்கு இந்தாண்டு வரவு - செலவு திட்டம் எவ்வாறு தனது பங்களிப்பை அளிக்கும் என்பதை மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் விரிவாக விளக்கினார்.

விரைவான சீர்திருத்தங்கள், குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு ஆதரவு, திறன்மேம்பாடு, அடுத்த தலைமுறை கட்டமைப்புக்கான நடவடிக்கைகள், சுகாதாரத்துறை மேம்பாட்டுக்கான முயற்சிகள், கல்வி மற்றும் இதர துறை நடவடிக்கைகளை அவர் எடுத்துரைத்தார்.

முதலீட்டு செலவினம் 17.1 லட்சம் கோடி இந்திய ரூபாவாக உயர்ந்துள்ளது. இது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 4.4 சதவீதம் என்றும் நிதியமைச்சர் தெரிவித்துள்ளார். " என்று குறிப்பிட்டுள்ளார்.

# மக்கள் விரோத தி.மு.க. ஆட்சியை அகற்றி த.வெ.கவை ஆட்சியில் அமர்த்த வேண்டும்

## த.வெ.க. தலைவர் விஜய் உரை

"மக்கள் விரோத தி.மு.க. ஆட்சியை அகற்றி, த.வெ.கவை ஆட்சி பீடத்தில் அமர்த்த வேண்டும் என்பதுதன் மக்களின் கனவு. 100 சதவீதம் த.வெ..க ஆட்சியமைக்கும். மக்களை விரும்பும் விஜய் வேண்டுமா? மக்கள் விரோத ஆட்சி நடத்தும் ஸ்டாலின் வேண்டுமா? அவ்வளவுதான் இந்த தேர்தல்."

- இவ்வாறு த.வெ.க. தலைவர் விஜய் தெரிவித்துள்ளார்.

சேலத்தில் த.வெ.க. சார்பில் மக்கள் சந்திப்பு நிகழ்ச்சி இன்று நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் பங்கேற்று பேசிய அக்கட்சியின் தலைவர் விஜய்,

"நம்மை குறைத்து மதிப்பிடும்போது, ஏளனமாக பார்க்கும்போது நம்மை நிரூபித்துக் காட்ட வேண்டும் என உத்வேகம் தோன்றும். நம்மை எந்த விஷயத்தில் கேலியும், கிண்டலும் செய்கிறார்களோ, அதே விஷயத்தை வைத்து சாதகமாக மாற்றுவதில் இருந்துதான் அந்த ஆற்றல் தொடங்கும்.

உண்மையான அந்த 'பவரை' சொல்லும் புள்ளியிலிருந்து ஆரம்பிக்கலாமா? 'ஏய் விஜய் வீட்டை விட்டு வெளியே வா? ஏய் விஜய் பனையூரை விட்டு வெளியே வா' எனச் சொல்பவர்களுக்கு என் வீடு எங்கே இருக்கிறது எனத் தெரியுமா? என்னை சீண்டிப் பார்க்க நினைத்து, கேலி கிண்டல் செய்பவர்களுக்கு நான் சொல்கிறேன். தமிழ்நாடு மற்றவர்களுக்கு மாநிலமாக இருக்கலாம். ஆனால், என் தாய்நாடான தமிழ்நாடு தான் என் வீடு. என் வீட்டில் 8 கோடி பேர் இருக்கிறார்கள். ஒட்டுமொத்த தமிழகமும் என் குடும்பம், என் உறவு, என் சொந்தம்.

எனக்கு எல்லாவற்றையும் கொடுத்த தமிழ்நாட்டுக்கு, இனி எல்லாமுமாக விஜய் நிற்பேன். தமிழ்நாட்டின் முதல் படை வீரனாக, முதல் பாதுகாவலனாக அவர்களின் கூடவே நிற்க வேண்டும் என்பதே என் குறிக்கோள். நான் உங்களிடம் ஓட்டு கேட்டு மட்டும் வரவில்லை, உங்களிடம் நீதி கேட்டு வந்துள்ளேன்.



உங்களுக்காக நீதி கேட்கவே நான் அரசியலுக்கு வந்தேன். ஆனால் இப்போது நான் உங்களிடம் நீதி கேட்டு வந்துள்ளேன். இந்த விஜய் என்ன தவறு செய்தான்? தன்னை நேசித்த மக்களுக்காக எல்லாவற்றையும் ஒதுக்கி தள்ளிவிட்டு அரசியலுக்கு வந்தது தப்பா? மற்ற கட்சிகளுக்கு நிகழ்ச்சிகள் நடத்த அனுமதியும், இடமும் கொடுக்கிறார்கள். ஆனால், நமக்கு மட்டும் இடம் கொடுக்க மாட்டேன் என்கிறார்கள். மக்களை சந்திக்க எனக்கு இடம் கொடுக்காமல் இருப்பது என்ன நியாயம்?

இந்த விஜய் உண்மையானவன். நமக்கு எதிராக சூழ்ச்சி செய்வது யார் என்பது மக்களுக்குத் தெரியும். அதர பழசான கூட்டணிக் கணக்கு, வாக்குக்கு பணம் கொடுப்பது, சாமியிடம் சத்தியம் வாங்குவது எல்லாம் இனி எடுபடாது. அவர்கள் கொடுக்கும் பணம், உங்கள் பணம். அதனை வாங்கிக் கொண்டு அவர்களின் காதில் விசில் ஊதி அனுப்புங்கள்.

நமது 'ஜென்ஸீ' தலைமுறையினருக்கு நான் சொல்ல விரும்புகிறேன். பணத்தை கொடுத்து ஏமாற்றினால், ஏமாறுவீர்களா? எங்கள் வாக்கு எங்கள் உரிமை, எங்கள் வாக்கு விசில் சின்னத்துக்குத் தான். வேறு யாரையும் நம்பி ஏமாற மாட்டோம் என அனைவரும் சொல்லுங்கள். இது உங்களுக்கு கேட்டுச்சா ஸ்டாலின் சார்? இனி நீங்கள் கொள்ளை அடித்து வைத்துள்ள பணம் எல்லாம், குப்பையில்தான் தூக்கி போடணும். உங்கள் ஊழல் ஆட்சியையும் மக்கள் குப்பையில்தான் தூக்கிப்போட போகிறார்கள்.

எனது குட்டி நண்பா, நண்பிகள் உங்கள் அம்மா, அப்பா மற்றும் குடும்பத்தினரை விசில் சின்னத்துக்கு வாக்கு போட சொல்லுங்கள். நாங்கள் அரசியலுக்கு வந்தது யாரையும் ஒழிக்கவோ, அழிக்கவோ வரவில்லை. யார் மீதும் தனிப்பட்ட வெறுப்போ, வன்மமோ கிடையாது. வெறுப்பு அரசியல் செய்ய அரசியலுக்கு வரவில்லை. அரசியல் ரீதியாக நமது எதிரி யார் என சொல்லிவிட்டு, தேர்தலில் வென்று மக்களுக்கு நன்றிக்கடன் செலுத்த அரசியலுக்கு வந்துள்ளோம்.

கூட்டணியை நம்பியுள்ள 75 மற்றும் 50 ஆண்டு பழமையான கட்சிகளை மீறி, களத்தில் தனியாக நின்று இன்று 30 சதவீத ஆதரவை பெற்றுள்ள எங்களுக்கு அனுபவம் இல்லையா? கட்சியை ஆரம்பித்த அண்ணா, எம்.ஜி.ஆர், ஜெயலலிதாவை மறந்தது, இவர்கள் சொன்னது எல்லாவற்றையும் மறந்ததுதான் இவர்களின் அனுபவம். கொள்ளையடிப்பதில் எங்களுக்கு அனுபவம் இல்லை.

மக்களை நேசிக்கும் நல்ல குணம் இருந்தால் போதும், நல்லாட்சி கொடுக்கலாம். நல்லாட்சி கொடுக்க மெத்தப் படித்த மேதாவியாக இருக்க வேண்டும் என்பது இல்லை. காமராஜர் போல, எம்.ஜி.ஆர் போல மக்கள் சக்தியின் துணையோடு நல்ல அதிகாரிகளின் துணையோடு சிறப்பான நல்லாட்சியை என்னால் கொடுக்க முடியும். நான் செய்து காட்டுகிறேன்.

ஆட்சியமைத்து நான்கே முக்கால் ஆண்டு ஆகிறது, இப்போது 'உங்கள் கனவை சொல்லுங்கள்' என்கிறார் ஸ்டாலின் சார். மக்கள் விரோத தி.மு.க. ஆட்சியை அகற்றி, த.வெ.கவை ஆட்சி பீடத்தில் அமர்த்த வேண்டும் என்பதுதன் மக்களின் கனவு. 100 சதவீதம் தவெக ஆட்சியமைக்கும். அதில் உங்கள் கனவு நிஜமாகும்." என்று தெரிவித்தார்.



# பங்களாதேஷ் தேர்தலில் வெற்றி பெற்று ஆட்சியை பிடித்தது தேசியவாதக் கட்சி

பங்களாதேஷ் பொதுத்தேர்தலில் பெரும்பான்மையை பெற்றுள்ள பங்களாதேஷ் தேசியவாதக் கட்சி ஆட்சி அமைக்க உள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

பங்களாதேஷ் தேசியவாதக் கட்சி மற்றும் அதன் கூட்டணிக் கட்சிகள் 211 தொகுதிகளிலும், ஜமாத்-இ-இஸ்லாமி கூட்டணி 70 தொகுதிகளில் வெற்றி பெற்றுள்ளன.

இதனடிப்படையில் 17 வருடங்களுக்கு பின்னர் நாடு திரும்பிய பங்களாதேஷ் தேசியவாதக் கட்சி தலைவர் தாரிக் ரஹ்மான், பங்களாதேஷின் அடுத்த பிரதமராக தெரிவாகலாம் என வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

அதேநேரம், தேர்தலில் போட்டியிட தடை விதிக்கப்பட்ட முன்னாள் பிரதமர் ஷேக் ஹசீனாவின் அவாமி லீக் கட்சி, இந்தத் தேர்தலை ஒரு ஏமாற்று வேலை என்று கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது.











# சமூக ஊடகங்களைப் பயன்படுத்த பெற்றோரின் அனுமதி கட்டாயம்

## போர்த்துகல் நாடாளுமன்றத்தில் புதிய சட்டம்

13 முதல் 16 வயதுக்குட்பட்ட சிறுவர்கள் சமூக ஊடகங்களைப் பயன்படுத்துவதற்குப் பெற்றோரின் நேரடி அனுமதி இருக்க வேண்டும் என்ற சட்டமூலம் போர்த்துகல் நாடாளுமன்றத்தில் முதலாம் வாசிப்பில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

ஐரோப்பாவில் இவ்வாறான கட்டுப்பாடுகளை விதிக்கும் முதலாவது சட்ட நடவடிக்கைகளில் ஒன்றாக இது பார்க்கப்படுகிறது.

சைபர் மிரட்டல்கள், தீங்கு விளைவிக்கும் உள்ளடக்கங்கள் மற்றும் இணையவேட்டையாளர்களிடமிருந்து சிறுவர்களைப் பாதுகாப்பதே இதன் முக்கிய நோக்கமாகும்.

டிஜிட்டல் மொபைல் கீ எனப்படும் பொது முறைமையின் ஊடாகப் பெற்றோர்கள் தமது அனுமதியை வழங்க முடியும்.

மேலும் தொழில்நுட்ப நிறுவனங்கள் டிஜிட்டல் மொபைல் கீ முறைமையுடன் ஒத்துப்போகக்கூடிய வயது சரிபார்ப்பு முறையைச் செயல்படுத்துவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.



13 வயதுக்குட்பட்ட சிறுவர்கள் சமூக ஊடகங்கள், காணொலி மற்றும் புகைப்படப் பகிர்வுத் தளங்கள் மற்றும் ஒன்லைன் சூதாட்டத் தளங்களைப் பயன்படுத்துவதற்கான தற்போதைய தடையை இந்தச் சட்டம் மேலும் பலப்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த விதிமுறைகளை மீறும் தொழில்நுட்ப நிறுவனங்களுக்கு அவற்றின் உலகளாவிய வருமானத்தில் 2 வீதம் வரை அபராதம் விதிக்கப்படலாம் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

சிறுவர்களின் மனநலம் மற்றும் இணையப் பாதுகாப்பு கருதி அவுஸ்திரேலியா மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகளும் இவ்வாறான கடுமையான சட்டங்களைக் கொண்டு வந்துள்ளன.

அவுஸ்திரேலியாவில் 16 வயதுக்குட்பட்டவர்களுக்குச் சமூக ஊடகங்களைப் பயன்படுத்த முழுமையான தடை கடந்த டிசம்பரில் அமுலுக்கு வந்தது.



# அமெரிக்கா - தாய்வான் இடையிலான பரஸ்பர வர்த்தக ஒப்பந்தம் கைச்சாத்து

தாய்வான் மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகள் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பரஸ்பர வர்த்தக ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட்டுள்ளன.

இதன்படி, தாய்வான் தயாரிப்புகளுக்கு அமெரிக்காவினால் விதிக்கப்படும் இறக்குமதி வரி விகிதம் 15 வீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது.

தாய்வான் பொருள்களுக்கு இதற்கு முன்னர் விதிக்கப்பட்டிருந்த 20 வீத வரி விகிதம் இப்போது 15 வீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது.

இது ஜப்பான் மற்றும் தென் கொரியா போன்ற நாடுகளுக்கு வழங்கப்படும் வரிச் சலுகைக்கு நிகரானது.

அமெரிக்காவிலிருந்து தாய்வானுக்கு ஏற்றுமதி செய்யப்படும் மோட்டார் வாகனங்கள், மாட்டிறைச்சி மற்றும் பன்றி இறைச்சி உள்ளிட்ட விவசாய மற்றும் கைத்தொழில் பொருள்களுக்கு தாய்வான் சந்தையில் முன்னுரிமை வழங்கப்படும்.

இந்த ஒப்பந்தத்தின் ஒரு பகுதியாக, தாய்வான் தனது குறைக்கடத்தி மற்றும் செயற்கை நுண்ணறிவு துறைகளில் அமெரிக்காவில் சுமார் 500 பில்லியன் டொலர் முதலீடு செய்ய உடன்பட்டுள்ளது.

கனடா முரசு

வெள்ளிக்கிழமை | 13/02/2026

## தீ விபத்தில் சிக்கி இளம்பெண் பலி

கனடாவில் இளம்பெண்ணொருவர் தன் வீட்டில் ஏற்பட்ட தீ விபத்தில் சிக்கி உயிரிழந்துள்ளார்.

கனடாவின் ஒன்ராறியோவிலுள்ள Loyalist Township 02▶



# கனடாவில் துப்பாக்கி சூடு அதிகரிப்பு; ஆய்வில் வெளியான அதிர்ச்சித் தகவல்

அமெரிக்காவுடன் ஒப்பிடுகையில் கனடாவில் துப்பாக்கி வன்முறை குறைவாக இருந்தாலும், ஜி20 நாடுகளை விட கனடாவில் அதிக துப்பாக்கி தொடர்பான மரணங்கள் பதிவாகி வருகின்றன என புதிய ஆய்வு தகவல்கள் தெரிவிக்கின்றன.

சுவிட்சர்லாந்தின் ஜெனீவாவை தளமாகக் கொண்டு செயல்படும் சுயாதீன ஆய்வு அமைப்பான ளுஅயடட யுசஅள ளுரசஎநல வெளியிட்டுள்ள தரவுகளின்படி இந்த விடயம் தெரியவந்துள்ளது. 02▶

# கனடாவில் இடம்பெற்ற தீ விபத்தில் ஒருவர் பலி

ஒன்டாரியோ மாகாணத்தின் நயாகரா பிராந்தியத்தில் உள்ள சென். கத்தரின்ஸ் பகுதியில் கூடாரத்தில் ஏற்பட்ட தீ விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கூடாத்தில் ஆண் ஒருவர் உயிரிழந்த நிலையில் கண்டுபிடிக்கப்பட்டதைத் தொடர்ந்து பொலிஸார் விசாரணையை முன்னெடுத்து வருகின்றனர்.

கிளெண்டேல் அவென்யூ அருகே வழக்கமான கண்காணிப்பு ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்த அதிகாரிகள், மவுண்டன் லாக்ஸ் பூங்கா காட்டுப் பகுதியில் தீப்பற்றி எரிவதை கவனித்துள்ளனர்.

மரங்கள் சூழ்ந்த பகுதியில் அமைந்திருந்த ஒரு கூடாரம் முழுமையாக தீப்பற்றி எரிந்து கொண்டிருந்ததாக விசாரணை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்




தகவல் கிடைத்ததும் ஸ்ட். கத்தரின்ஸ் தீயணைப்பு படையினர் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று தீயை அணைத்தனர். தீ அணைக்கப்பட்ட பின்னர், சம்பவ இடத்தில் ஆண் ஒருவர் உயிரிழந்த நிலையில் கண்டுபிடிக்கப்பட்டார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்த நபரின் அடையாளம் இதுவரை வெளியிடப்படவில்லை.

இந்த சம்பவம் தொடர்பான விசாரணையை தற்போது நயாகரா பிராந்திய பொலிஸின் 1 ஆம் மாவட்ட குற்றப் புலனாய்வு பிரிவு மேற்கொண்டு வருகிறது. ஒன்டாரியோ தீயணைப்பு மார்ஷல் அலுவலகத்துடன் இணைந்து விசாரணை நடைபெறுகிறது.



## தீ விபத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்னுமிடத்தில் வாழ்ந்துவந்த பிரமிளா, வீட்டை விட்டு வெளியே புறப்பட்டுள்ளார்.

அவர் காரில் பயணித்துக்கொண்டிருக்கும்போது, அவரது மகளான லக்ஷா (வயது 19) தொலைபேசி அழைப்பை எடுத்து, தங்கள் வீட்டில் தீப்பற்றி எரிவதாகவும், தான் வீட்டுக்குள் சிக்கிக்கொண்டுள்ளேன் என்றும் கூறியுள்ளார்.

"அம்மா, நம் வீட்டில் தீப்பற்றி எரிகிறது, அம்மா, வாருங்கள், என்னைக் காப்பாற்றுங்கள்" என லக்ஷா கதற, எப்படியாவது கதவருகே வந்துவிடு என்று கூறியுள்ளார் பிரமிளா.

ஆனால், கதவையும் தீ சூழ்ந்துள்ளது. ஆகவே, "அம்மா, கதவைத் திறக்கமுடியவில்லை, வெளியே வரமுடியவில்லை "என்று கதறியுள்ளார் லக்ஷா.

அதற்குப் பிறகு அவரின் அழைப்பு அமைதியாகிவிட, வீட்டுக்கு காரை ஓட்டிவந்த பிரமிளாவால், வீடு பற்றி எரிந்துகொண்டிருப்பதை மட்டுமே காணமுடிந்துள்ளது. பின்னர் லக்ஷா தீயில் எரிந்து சடலமாகவே மீட்கப்பட்டார்.

ஜனவரி மாதம் 29 ஆம் திகதி இந்த துயர சம்பவம் நிகழ்ந்த நிலையில், பொலிசார் விசாரணை மேற்கொண்டும், என்ன நடந்தது, எப்படி வீட்டில் தீப்பற்றியது என்பது குறித்து இதுவரை எந்த தகவலும் கிடைக்கவில்லை.

லக்ஷாவை இழந்த அவரது குடும்பத்தினர், அவரது கடைசி வார்த்தைகளை எண்ணி எண்ணி கண்ணீர் விட்டுக்கொண்டிருக்கிறார்கள்.




## கனடாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜி 20 நாடுகளில் துப்பாக்கி தொடர்பான மரணங்கள் வீதத்தில் கனடா 7 ஆவது இடத்தில் உள்ளது.

கனடாவில் 100,000 மக்களில் 0.9 வீதமானோர் துப்பாக்கி வன்முறை மரணங்களுக்கு உள்ளாகின்றனர்.

இந்த வீதம் ரஷ்யா, இந்தியா, சவூதி அரேபியா போன்ற நாடுகளை விட அதிகமாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

ஜி 20 நாடுகளில் துப்பாக்கி கொலை வீதத்தில் மெக்சிகோ முதலிடத்தில் உள்ளது. அங்கு 100,000 மக்களில் 22.37 வீதமானோர் துப்பாக்கிச் சூட்டால் உயிரிழந்துள்ளனர்.

அதனைத் தொடர்ந்து பிரேசில் மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகள் உள்ளன.

ஜப்பான் மற்றும் தென் கொரியாவில் 0 வீத மரணங்கள் பதிவாகியுள்ளன. சீனாவில் இந்த வீதம் 0.03 ஆகும்.

இதேவேளை, கனடாவின் பிரிட்டிஷ் கொலம்பியாவின் வடபகுதியில் அமைந்துள்ள டம்ப்லர் ரிட்ஜ் சமூகத்தில் அண்மையில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூடு சம்பவம் நாட்டை உலுக்கியது.

இந்த சம்பவத்தில் சந்தேகநபரை உட்பட 10 பேர் உயிரிழந்தனர். 20 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.




# வாகன விபத்து ஒருவர் பலி; சாரதி மீது குற்றச்சாட்டு பதிவு

டொராண்டோ எடோபிகோ பகுதியில் இடம்பெற்ற விபத்தில் பாதசாரி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்த சம்பவத்துடன் தொடர்புடைய 25 வயது சாரதிக்கு எதிராக குற்றச்சாட்டு பதிவு செய்யப்பட்டுள்ளதாக டொராண்டோ பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த விபத்து பெப்ரவரி 3 ஆம் திகதி மாலை சுமார் 7.15 மணியளவில், கிப்லிங் அவென்யூக்கு அருகிலுள்ள டுன்டாஸ் மேற்கு வீதி மற்றும் அக்ரான் அவன்யு சந்திப்பில் இடம்பெற்றது.

28 வயதான ஒருவர் டுன்டாஸ் வீதியை கடந்து சென்றபோது கிழக்கு திசையில் பயணித்த சாம்பல் நிற டொயோட்டா ரெவ் வாகனம் அவரை மோதியது என தெரிவிக்கப்படுகின்றது.

வாகனம் சந்திப்பை கடந்தபோது பாதசாரியை மோதியது என பொலிஸார் வெளியிடப்பட்ட செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளனர்.

கடுமையாக காயமடைந்த பாதசாரி உடனடியாக மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டபோதும், பின்னர் உயிரிழந்துள்ளார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

வாகனத்தின் சாரதி சம்பவ இடத்திலேயே இருந்துள்ளார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

விசாரணைகளின் அடிப்படையில், மிசிசாகாவைச் சேர்ந்த 25 வயதான ஜோசப் டெனியல் என்பவருக்கு எதிராக அபாயகரமான முறையில் வாகனம் இயக்கியமை என்ற குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது. இந்த சம்பவம் தொடர்பான விசா ரணை தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

# கனடியரென ஆள் மாறாட்டம் செய்த அமெரிக்கப் பிரஜைக்குத் தண்டனை

கிழக்கு ஒன்டாரியோவில் கனடிய பிரஜை போன்று ஆளம் மாறாட்டம் செய்து பல ஆண்டுகள் வாழ்ந்த 70 வயதான அமெரிக்க பிரஜைக்கு ஒரு ஆண்டு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

2024ஆம் ஆண்டு இந்த அடையாள மோசடி விசாரணையை தொடங்கியது.

குற்றச்சாட்டு நபர் போலியான அடையாளத்தை பயன்படுத்தி மீண்டும் கனடாவிற்குள் நுழைய முயன்றபோது கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்து இந்த விசாரணை ஆரம்பிக்கப்பட்டது.

2012ஆம் ஆண்டு முதல் குற்றச்சாட்டு நபர் சட்டவிரோதமாக ஒரு கனடிய குடிமகனின் அடையாளத்தை ஏற்றிருந்தது விசாரணையில் உறுதி செய்யப்பட்டது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், 2008-2009 காலப்பகுதியில், நியூ ஜெர்சி மாநிலத்தில் நீதிமன்றத்தில் ஆஜராக தவறிய குற்றச்சாட்டில் தேடப்பட்டு வந்த அவர், சட்டவிரோதமாக கனடாவிற்குள் நுழைந்துள்ளார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.




ஒன்டாரியோவின் சவுத் கிளெங்காரி பகுதியில் வசித்தபோது, உயிருடன் வாழ்ந்து கொண்டிருந்த ஒரு கனடிய குடிமகனின் தனிப்பட்ட தகவல்களை பெற்று, தனிப்பட்ட நலனுக்காக அவரைப் போல நடித்துள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

திருடப்பட்ட அந்த அடையாளத்தை பயன்படுத்தி, பின்னர் மேலும் ஒரு போலியான அடையாளத்தையும் உருவாக்கி, மோசடியாக கனடிய குடியுரிமைச் சான்றிதழ், கடவுச்சீட்டு, சாரதி உரிமம் மற்றும் சுகாதார அட்டை ஆகியவற்றையும் பெற்றிருந்தார்.

போலியான அடையாளத்துடன் கனடாவிற்குள் மீண்டும் நுழைய முயன்றபோது, கனடா எல்லை சேவைகள் முகவர் நிறுவன அதிகாரிகள் அவரை கைது செய்துள்ளனர்.

விசாரணையின் போது மோசடியாக பெறப்பட்ட அனைத்து அடையாள ஆவணங்களும் பறிமுதல் செய்யப்பட்டன.

குடியுரிமை மோசடி, அடையாள மோசடி, போலி கடவுச்சீட்டை தயாரித்தல் அல்லது பயன்படுத்தல், அரச ஆவணத்தை சட்டவிரோதமாக வைத்திருத்தல் மற்றும் பொய்யான அறிக்கை அளித்தல் உள்ளிட்ட பல குற்றச்சாட்டுகளில் அவர் குற்றவாளி என நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

ஒரு ஆண்டு சிறைத் தண்டனையுடன், அடுத்த மூன்று ஆண்டுகள் கனடாவிற்குள் நுழையத் தடை விதிக்கும் பரோல் உத்தரவும் வழங்கப்பட்டுள்ளது.